மரம் வளர்ப்போம்! மழை பெறுவோம்!!

**வாலாஜாபேட்டை நகராட்சி**

**நகரமன்ற அவசரக் கூட்டம்**

**வாலாஜாபேட்டை நகராட்சியில் 2018-ம் வருடம் மே மாதம் 14-ந் தேதி திங்கட்கிழமை மாலை 4.00 மணியளவில் நகரமன்றக் கூடத்தில் நடைபெற்ற அவசரக் கூட்ட நடவடிக்கைகள்**

**முன்னிலை: திரு.கு.அசோக்குமார், பி.காம்., அவர்கள்**

**தனி அலுவலர்**

**மன்றப் பொருள்கள்**

1. இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் Tamilnadu Urban Road Infrastructure Fund 2018-19-ன் கீழ் கால்வாய்களுடன் கூடிய தார் சாலைகள் அமைக்கும் பணியினை கீழ்கண்டுள்ள விவரப்படி மொத்தம் ரூ.50.00 இலட்சத்தில் பணிகள் மேற்கொள்ள கீழ்காணும் பணிகள் தேர்வு செய்யப்பட்டு மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகின்றது.

| வ.எண் | பணிகள் மேற்கொள்ளப்படும் இடங்களின் பெயர் | மதிப்பீடு ரூ.இலட்சத்தில் |
|---|---|---|
| 1 | இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்:09, த.நா.வீ.வ.வாரியம் 10-வது குறுக்கு தெருவில் தார் சாலை, வார்டு எண்:17, மசூதி தெருவில் தார் சாலை, வார்டு எண்:19, நரசோஜி தெருவில் தார் சாலை, வார்டு எண்:22, ஜங்கம்மர் தெரு மற்றும் சுவர்ணர் தெரு ஆகிய பகுதிகளில் தார் சாலை அமைக்கும் பணிகள் | 50.00 |
| | மொத்தம் | 50.00 |

அலுவலகக்குறிப்பு:
1)மன்றம் அனுமதிக்கலாம்.
2)திட்ட மதிப்பீடு ரூ.50.00 இலட்சத்திற்கு மன்றம் அனுமதிக்கலாம்.
3)மேற்படி பணிகளை Tamilnadu Urban Road Infrastructure Fund 2018-19-ன் கீழ் பணிகள் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண்:1115/2018/இ1)

2.` நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் 21.03.2018-ம் தேதிய ஆய்வுக் கூட்டத்தில் சொத்துவரி கேட்புக்கு ஏற்றவாறு குடிநீர் இணைப்புகள் வழங்கப்பட வேண்டும் என அறிவுறுத்தப்பட்டுள்ளது. அதன்படி, இந்நகராட்சியில் 8617 சொத்துவரி கேட்புகள் உள்ள நிலையில் தற்போது வரை 5743 குடிநீர் இணைப்புகள் மட்டுமே வழங்கப்பட்டுள்ளன. மேற்கண்ட பொருள் குறித்து நடைபெற்ற நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், வேலூர் அவர்களின் 19.02.2018-ம் தேதிய ஆய்வுக் கூட்டத்தில் இந்நகராட்சியில் கூடுதலாக 2846 குடிநீர் இணைப்புகள் வழங்கப்பட வேண்டுமென குறியீடு நிர்ணயம் உத்திரவிடப்பட்டுள்ளது. அதன்படி தெருவில் உள்ள பகிர்மான குழாயிலிருந்து வீடு வரை குழாய் பதித்து 2846 எண்ணிக்கை புதிய குடிநீர் இணைப்புகள் (Internal Plumbing of Water Supply House Service Connections) வழங்கிட தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ.100.00 இலட்சத்திற்கு நிர்வாக அனுமதி வழங்கிட கோரி நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கு கருத்துருக்கள் சமர்ப்பித்திட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு:
1)அனுமதிக்கலாம்.
2)மதிப்பீடு தொகை ரூ.100.00 இலட்சத்தை TUFIDCO நிறுவனம் மூலம் வட்டியில்லா கடனாக பெற்று மேற்கண்ட பணி மேற்கொள்ள அனுமதி கோரி நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கு கருத்துருக்கள் சமர்ப்பிக்க மன்றம் அனுமதிக்கலாம்
(ந.க.எண:0901/2018/இ1)

3. இந்நகராட்சியில் திடக்கழிவு மேலாண்மை பணியினை தூய்மை பாரதம் திட்டம் 2018-19-ன் கீழ் BIO-MINING பணியினை மேற்கொள்ள திட்ட மதிப்பீடு ரூ.390.00 இலட்சத்தில் திட்ட பிரேரணைகள் தயார் செய்து நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை-5 அவர்களுக்கு அனுப்பி வைக்க மன்றத்தின் அனுமதி வேண்டி வைக்கப்படுகின்றது.

அலுவலகக்குறிப்பு:

1.மன்றம் அனுமதிக்கலாம்.

2.திட்ட மதிப்பீடு ரூ.390.00 இலட்சத்திற்கு மன்றம் அனுமதிக்கலாம்.

3.மேற்படி பணிகளை தூய்மை பாரதம் திட்டம் 2018-19-ன் கீழ் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்:1116/2018/இ1)

4. இந்நகராட்சியில் திடக்கழிவு மேலாண்மை பணியினை தூய்மை பாரதம் திட்டம் 2018-19-ன் கீழ் கீழ்கண்ட பணியினை மேற்கொள்ள திட்ட மதிப்பீடு ரூ.22.40.00 இலட்சத்தில் திட்ட பிரேரணைகள் தயார் செய்து நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை-5 அவர்களுக்கு அனுப்பி வைக்க மன்றத்தின் அனுமதி வேண்டி வைக்கப்படுகின்றது.

| S.No | Name of the Work | Estimate Amount(Rs.in Lakhs) |
|---|---|---|
| 1 | Purchase of Battery operated cycle Rickshaw -10 Nos | 22.40 |
| | மொத்தம் | 22.40 |

அலுவலகக்குறிப்பு:

1.மன்றம் அனுமதிக்கலாம்.

2.திட்ட மதிப்பீடு ரூ.22.40 இலட்சத்திற்கு மன்றம் அனுமதிக்கலாம்.

3.மேற்படி பணிகளை தூய்மை பாரதம் திட்டம் 2018-19-ன் கீழ் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்:1117/2018/இ1)

5. நகராட்சிகளின் நிர்வாக துணை ஆணையர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்:38038/2013/UPA2, நாள்:15.02.2018-ல் தெரிவித்துள்ளபடி, இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் DAY-NULM SUH-4th PSC for 2017-2018-ம் ஆண்டு திட்டத்தின் கீழ் சிறப்பு Shelter பணியினை மேற்கொள்ள கீழ் கண்டுள்ள விவரப்படி மொத்தம் ரூ.75.00 இலட்சத்திற்கு நிதி ஒதுக்கீடு செய்து வரப்பெற்றுள்ளதை மன்றத்தின் பார்வைக்கும் மற்றும் மேற்கண்ட பணியினை மேற்கொள்ள திட்ட மதிப்பீடு ரூ.75.00 இலட்சத்தில் திட்ட பிரேரணைகள் தயார் செய்து நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை-5 அவர்களுக்கு அனுப்பி வைக்க மன்றத்தின் அனுமதி வேண்டி வைக்கப்படுகின்றது.

| வ.எண் | இனங்களின் பெயர் | மதிப்பீடு ரூ. இலட்சத்தில் |
|---|---|---|
| 1 | வாலாஜாபேட்டை நகராட்சி எல்லைக்குட்பட்ட வாலாஜா அரசு தலைமை மருத்துவமனை வளாகத்தினுள் உட்புற நோயாளிகளின் உதவியாளர்கள் தங்க சிறப்பு தங்குமிடம் (Special Shelter) கட்டிடம் கட்டும் பணி மேற்கொள்ளுதல் | 75.00 |
| | மொத்தம் | 75.00 |

அலுவலகக்குறிப்பு:

1)மன்றம் அனுமதிக்கலாம்.

2)மேற்படி பணியினை DAY – NULM SUH-4th PSC for 2017-2018-ம் ஆண்டு திட்டத்தின் கீழ் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்:2026/2016/இ1)

6. நகராட்சிகளின் நிர்வாக துணை ஆணையர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்:38038/2013/UPA2, நாள்:15.02.2018-ல் தெரிவித்துள்ளபடி, இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் DAY-NULM SUH-4th PSC for 2017-2018-ம் ஆண்டு திட்டத்தின் கீழ் சிறப்பு Shelter பணியினை மேற்கொள்ள கீழ் கண்டுள்ள விவரப்படி மொத்தம் ரூ.75.00 இலட்சத்திற்கு நிதி ஒதுக்கீடு செய்தும், மேற்கண்ட பணியினை மேற்கொள்ள திட்ட மதிப்பீடு ரூ.75.00 இலட்சத்தில் விரிவான திட்ட அறிக்கை (Detailed Preject Report) ஒன்று தயாரிக்கவும் அதற்காக தனியார் ஆலோகர் (ஊடிஇளரடவயஇவ) ஒருவரை நியமிக்கவும் அதற்கான தோராய செலவினம் ரூ.1.50 இலட்சத்திற்கு மன்றத்தின் ஒப்புதலுக்கும் மற்றும் பணியின் அவசர அவசியத்தை கருதி மேற்கண்ட பணிக்கு தனியார் ஆலோசகர்களிடம் விலைப்புள்ளி பெற்று மேல் நடவடிக்கை தொடர மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகின்றது.

| வ.எண் | இனங்களின் பெயர் | மதிப்பீடு ரூ. இலட்சத்தில் |
|---|---|---|
| 1 | வாலாஜாபேட்டை நகராட்சி எல்லைக்குட்பட்ட வாலாஜா அரசு தலைமை மருத்துவமனை வளாகத்தினுள் உட்புற நோயாளிகளின் உதவியாளர்கள் தங்க சிறப்பு தங்குமிடம் (Special Shelter) கட்டிடம் கட்டும் பணி மேற்கொள்ளுதல் | 75.00 |
| | மொத்தம் | 75.00 |

<u>அலுவலகக்குறிப்பு:</u>
1)மன்றம் அனுமதிக்கலாம்.
2)மேற்படி பணியினை DAY – NULM SUH-4th PSC for 2017-2018-ம் ஆண்டு திட்டத்தின் கீழ் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண்:2026/2016/இ1)

தனிஅலுவலர்(ம)ஆணையர்
வாலாஜாபேட்டை நகராட்சி.

மரம் வளர்ப்போம்! மழை பெறுவோம்!!

## வாலாஜாபேட்டை நகராட்சி

## நகரமன்ற அவசரக் கூட்டம்

**வாலாஜாபேட்டை நகராட்சியில் 2018-ம் வருடம் மே மாதம் 31-ந் தேதி வியாழக்கிழமை காலை 11.00 மணியளவில் நகரமன்றக் கூடத்தில் நடைபெற்ற அவசரக் கூட்ட நடவடிக்கைகள்**

**முன்னிலை: திரு.கு.அசோக்குமார், பி.காம்., அவர்கள்**

**தனி அலுவலர்**

**மன்றப் பொருள்கள்**

1\. வாலாஜாபேட்டை நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் வசிக்கும் 32001 மக்கள்தொகை மற்றும் இந்நகருக்கு வந்து செல்லும் மக்கள்(Floating Population) தொகையால் இந்நகரில் தினமும் சுமார் 14 மெட்ரிக் டன் அளவிற்கு திடக்கழிவுகள் உற்பத்தியாகிறது. இத்திடக்கழிவுகள் தற்பொழுது ஈசான்யம் சாலையில் உள்ள உரக்கிடங்கில்(சுமார் 3.5 ஏக்கர்) கொட்டப்பட்டு வருகின்றது. தற்பொழுது நகராட்சியில் உள்ள 23 தள்ளுவண்டிகள், 5 மூன்று சக்கர வண்டிகள் மூலம் சுமார் 45% வீடுகளில் திடக்கழிவுகளில் மக்கும் மக்காத குப்பைகள் என பிரித்து வாங்கப்படுகிறது. நகரில் உருவாகும் திடக்கழிவுகளில் எரியக்கூடிய தன்மையுடைய சுமார் 2 மெட்ரிக் டன் (20 விழுக்காடு) திடக்கழிவுகளான பிளாஸ்டிக், ரப்பர், பிளாஸ்டிக் பாட்டில்கள், துணிகள், தேங்காய் ஓடுகள் மற்றும் மரங்கள் ஆகியவற்றினை கையாளுவதிலும் மேலும் அப்புறப்படுத்துவதிலும் சிரமங்கள் ஏற்படுகின்றன. இவற்றின் பாதுகாப்பாக கையாண்டு வெளியேற்றுவதற்கான வழிமுறைகள் குறித்து நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் 11.05.2018 அன்று நடைபெற்ற ஆய்வு கூட்டத்தில் ஆலோசித்தபோது மேற்கண்ட எரியக்கூடிய தன்மை வாய்ந்த திடக்கழிவுகளை கடலூர் மாவட்டத்தில் உள்ள 5 நகராட்சிகளும் (கடலூர், பண்ருட்டி, நெல்லிக்குப்பம், சிதம்பரம் மற்றும் விருத்தாச்சலம்) அரியலூர் மாவட்டத்தில் உள்ள அல்ட்ராடெக் சிமெண்ட் தொழிற்சாலையில் எரிபொருளாக பயன்படுத்துவதற்காக வழங்குவதால் அந்நிறுவனத்துடன் கலந்தாலோசித்து நடவடிக்கை எடுக்கலாம் என தெரிவித்ததை தொடர்ந்து மேற்கண்ட சிமெண்ட் தொழிற்சாலை நிர்வாகத்துடன் தொடர்பு கொண்டு பேசிய போது நாளொன்றுக்கு 250 மெட்ரிக் டன் எரியக்கூடிய திடக்கழிவுகளை கையாளக்கூடிய அளவில் தங்களிடம் திறன் இருப்பதாகவும் இது சம்பந்தமாக அந்நிறுவனத்துடன் 10 ஆண்டு காலத்திற்கு எரியக்கூடிய திடக்கழிவுகளை வழங்குவதற்கு சம்பந்தப்பட்ட நகராட்சி புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்து கொண்டால் திடக்கழிவுகளை நகராட்சியின் செலவில் நகராட்சி வாகனங்களில் ஏற்றி அரியலூர் மாவட்டத்தில் உள்ள அல்ட்ராடெக் சிமெண்ட் தொழிற்சாலையில் வந்து தர வேண்டும் எனவும் மேற்கண்ட எரியக்கூடிய திடக்கழிவுகளை நகராட்சி இலவசமாக தர வேண்டும் எனவும் நிபந்தனை தெரிவித்தனர். இது சம்பந்தமான மாதிரி புரிந்துணர்வு ஒப்பந்த உடன்படிக்கையும் கொடுத்துள்ளனர். வாலாஜாபேட்டை நகராட்சியில் நாளொன்றுக்கு உற்பத்தியாகும் திடக்கழிவுகளில் எரியக்கூடிய தன்மையுடைய 2 மெட்ரிக் டன் திடக்கழிவுகளை கையாளுவதும் அவற்றின் பாதுகாப்பாக வெளியேற்றுவதிலும் பல்வேறு சிரமங்கள் உள்ளன. எனவே அவற்றினை பாதுகாப்பாக வெளியேற்றிட மேற்கண்ட சிமெண்ட் தொழிற்சாலை நிறுவனத்துடன் 10 ஆண்டு காலத்திற்கு புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்து கொள்ளவும் அதற்கான விலையேதும் இல்லாமல் இலவசமாக இத்திடக்கழிவுகளை நகராட்சி சொந்த பொறுப்பில் இந்நிறுவனத்திற்கு வழங்கவதற்கும் நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்கள் அனுமதி பெற்று நடவடிக்கை எடுத்திட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு:

1)வாலாஜாபேட்டை நகராட்சியில் நாளொன்றுக்கு உற்பத்தியாகும் எரியக்கூடிய தன்மையுள்ள திடக்கழிவுகளை கையாளுவதிலும் மற்றும் பாதுகாப்பாக வெளியேற்றுவதிலும் உள்ள சிரமங்கள் கருத்தில் கொண்டு அரியலூர் மாவட்டத்தில் உள்ள அல்ட்ராடெக் சிமெண்ட் நிறுவனத்திற்கு விலையேதும் இல்லாமல் இலவசமாக இத்திடக்கழிவுகளை நகராட்சி வாகனத்தில் கொண்டு சென்று வழங்குவதற்கு நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்கள் அனுமதி பெற்று நடவடிக்கை எடுத்திட மன்றம் அனுமதிக்கலாம்.

2)பத்தாண்டு காலத்திற்கு அல்ட்ராடெக் சிமெண்ட் நிறுவனத்திற்கு திடக்கழிவுகளை வழங்குவதற்கு அந்நிறுவனத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்:363/2018/எச்1)

தனிஅலுவலர்(ம)ஆணையர்,
வாலாஜாபேட்டை நகராட்சி.

மரம் வளர்ப்போம்! மழை பெறுவோம்!!

**வாலாஜாபேட்டை நகராட்சி**

**நகரமன்ற சாதாரணக் கூட்டம்**

**வாலாஜாபேட்டை நகராட்சியில் 2018-ம் வருடம் மே மாதம் 31-ந் தேதி வியாழக்கிழமை மாலை 4.00 மணியளவில் நகரமன்றக் கூடத்தில் நடைபெற்ற சாதாரணக் கூட்ட நடவடிக்கைகள்**

**முன்னிலை: திரு.கு.அசோக்குமார், பி.காம்., அவர்கள்**

**தனி அலுவலர்**

**மன்றப் பொருள்கள்**

1. இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட கீழ்குறிப்பிட்டுள்ள பகுதிகளில் அமைந்துள்ள சமுதாய கழிப்பிடம் மிகவும் பழுதடைந்து உள்ளதால் அதனை இடித்து அப்புறப்படுத்திட ஆகும் தோராய மதிப்பீட்டு தொகை ரூ.2.60 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டி வைக்கப்படுகின்றது.

| வ.எண் | பணியின் விவரம் | மதிப்பீடு தொகை ரூ. |
|---|---|---|
| 1 | வார்டு எண்:06, திருத்தணி தெத்து தெருவில் உள்ள கழிப்பிடம் | 80,000/- |
| 2 | வார்டு எண்:17, திருவள்ளுவர் தெருவில் உள்ள பழைய கழிப்பிடம் | 80,000/- |
| 3 | வார்டு எண்:23, காந்தி நகர் பகுதியில் உள்ள கழிப்பிடம் | 1,00,000/- |
| | மொத்தம் | 2,60,000/- |

அலுவலகக்குறிப்பு:

1)மன்றம் அனுமதிக்கலாம்.

2)2018-19-ம் ஆண்டு வரவு-செலவு திட்டத்தில் சேர்த்து பொதுநிதியிலிருந்து செலவினத்தை மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்: /2018/இ1)

2. இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் Septage Manegement திட்டத்தை செயல்படுத்திட விரிவான திட்ட அறிக்கை தயார் செய்து நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கு அனுப்ப வேண்டியுள்ளதால் மேற்கண்ட பணி மேற்கொள்ளப்பட்டு அதனை Computer Print எடுத்து Spiral Binding போட வேண்டியுள்ளதால் அதற்கான தோராய செலவினம் தொகை ரூ.5000/-க்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகின்றது.

அலுவலகக்குறிப்பு:

1)மன்றம் அனுமதிக்கலாம்.

2)2018-19-ம் ஆண்டு வரவு-செலவு திட்டத்தில் சேர்த்து பொது நிதியிலிருந்து செலவினத்தை மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

3)பணியின் அவசர அவசியம் கருதி தனிஅலுவலர் அவர்கள் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டமைக்கும் மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்: /2018/இ1)

3. இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் Septage Manegement திட்டத்தை செயல்படுத்திட விரிவான திட்ட அறிக்கை தயார் செய்து நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கு அனுப்ப வேண்டியுள்ளதால் மேற்கண்ட பணிக்கு ஒரு சில பணிகள் Drawing AutpCAD –ல் பணி மேற்கொள்ளப்பட்டு அதனை கலர் Print எடுக்க வேண்டியுள்ளதால் அதற்கான தோராய செலவினம் தொகை ரூ.5000/-க்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகின்றது.

<u>அலுவலகக்குறிப்பு:</u>

1)மன்றம் அனுமதிக்கலாம்.

2)2018-19-ம் ஆண்டு வரவு-செலவு திட்டத்தில் சேர்த்து பொது நிதியிலிருந்து செலவினத்தை மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

3)பணியின் அவசர அவசியம் கருதி தனிஅலுவலர் அவர்கள் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டமைக்கும் மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்: /2018/இ1)

4. இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் Septage Manegement திட்டத்தை செயல்படுத்திட விரிவான திட்ட அறிக்கை தயார் செய்து நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கு அனுப்ப வேண்டியுள்ளதால் மேற்கண்ட பணிக்கு ஒரு சில பணிகள் Drawing AutpCAD –ல் பணி மேற்கொள்ள வேண்டியுள்ளதால் அதற்கான தோராய செலவினம் தொகை ரூ.5000/-க்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகின்றது.

<u>அலுவலகக்குறிப்பு:</u>

1)மன்றம் அனுமதிக்கலாம்.

2)2018-19-ம் ஆண்டு வரவு-செலவு திட்டத்தில் சேர்த்து பொது நிதியிலிருந்து செலவினத்தை மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

3)பணியின் அவசர அவசியம் கருதி தனிஅலுவலர் அவர்கள் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டமைக்கும் மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்: /2018/இ1)

5. இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் Septage Manegement திட்டத்தை செயல்படுத்திட விரிவான திட்ட அறிக்கை தயார் செய்து நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கு அனுப்ப வேண்டியுள்ளதால் மேற்கண்ட பணி மேற்கொள்ளப்பட்டு அதனை Computer Print எடுத்து Spiral Binding போட வேண்டியுள்ளதால் அதற்கான தோராய செலவினம் தொகை ரூ.5000/-க்கு தனிஅலுவலர் அவர்களின் முன் அனுமதி வழங்கப்பட்டதின் பேரில் விலைப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்ட விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளதை மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகின்றது.

| வ.எண் | ஒப்பந்ததாரர் பெயர் | தொகை ரூ |
|---|---|---|
| 1 | திரு.டி.பாஸ்கரன்,<br>நகராட்சி ஒப்பந்ததாரர்,<br>வாலாஜாபேட்டை. | 4950/- |
| 2 | திரு.பி.லோகநாதன்,<br>நகராட்சி ஒப்பந்ததாரர்,<br>வாலாஜாபேட்டை. | 5100/- |

<u>அலுவலகக்குறிப்பு:</u>

1)மன்றம் அனுமதிக்கலாம்.

2)மேற்படி, வரப்பெற்ற இரண்டு விலைப்புள்ளிகளில் வ.எண்:1-ல் உள்ள திரு.டி.பாஸ்கரன், நகராட்சி ஒப்பந்ததாரர் அவர்களின் குறைவான விலைப்புள்ளியை ஏற்கலாம்.

3)பணியின் அவசர அவசியம் கருதி தனிஅலுவலரின் முன் அனுமதி பெற்று வேலை உத்திரவு வழங்கியதற்கும் மன்றம் அனுமதி அளிக்கலாம்.

(ந.க.எண்: /2018/இ1)

6. இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் Septage Manegement திட்டத்தை செயல்படுத்திட விரிவான திட்ட அறிக்கை தயார் செய்து நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கு அனுப்ப வேண்டியுள்ளதால் மேற்கண்ட பணிக்கு ஒருசில பணிகள் Drawing AutoCAD-ல் பணி மேற்கொள்ள வேண்டியுள்ளதால் அதற்கான தோராய செலவினம் தொகை ரூ.5000/-க்கு தனிஅலுவலர் அவர்களின் முன் அனுமதி வழங்கப்பட்டதின் பேரில் விலைப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்ட விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளதை மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகின்றது.

| வ.எண் | ஒப்பந்ததாரர் பெயர் | தொகை ரூ |
|---|---|---|
| 1 | திரு.டி.பாஸ்கரன்,<br>நகராட்சி ஒப்பந்ததாரர்,<br>வாலாஜாபேட்டை. | 4950/- |
| 2 | திரு.பி.லோகநாதன்,<br>நகராட்சி ஒப்பந்ததாரர்,<br>வாலாஜாபேட்டை. | 5100/- |

<u>அலுவலகக்குறிப்பு:</u>
1)மன்றம் அனுமதிக்கலாம்.
2)மேற்படி, வரப்பெற்ற இரண்டு விலைப்புள்ளிகளில் வ.எண்:1-ல் உள்ள திரு.டி.பாஸ்கரன், நகராட்சி ஒப்பந்ததாரர் அவர்களின் குறைவான விலைப்புள்ளியை ஏற்கலாம்.
3)பணியின் அவசர அவசியம் கருதி தனிஅலுவலரின் முன் அனுமதி பெற்று வேலை உத்திரவு வழங்கியதற்கும் மன்றம் அனுமதி அளிக்கலாம்.
(ந.க.எண்: /2018/இ1)

7. இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் Septage Manegement திட்டத்தை செயல்படுத்திட விரிவான திட்ட அறிக்கை தயார் செய்து நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கு அனுப்ப வேண்டியுள்ளதால் மேற்கண்ட பணிக்கு ஒருசில பணிகள் Drawing AutoCAD-ல் பணி மேற்கொள்ளப்பட்டு அதனை கலர் Print எடுக்க வேண்டியுள்ளதால் அதற்கான தோராய செலவினம் தொகை ரூ.5000/-க்கு தனிஅலுவலர் அவர்களின் முன் அனுமதி வழங்கப்பட்டதின் பேரில் விலைப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்ட விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளதை மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகின்றது.

| வ.எண் | ஒப்பந்ததாரர் பெயர் | தொகை ரூ |
|---|---|---|
| 1 | திரு.டி.பாஸ்கரன்,<br>நகராட்சி ஒப்பந்ததாரர்,<br>வாலாஜாபேட்டை. | 4950/- |
| 2 | திரு.பி.லோகநாதன்,<br>நகராட்சி ஒப்பந்ததாரர்,<br>வாலாஜாபேட்டை. | 5100/- |

<u>அலுவலகக்குறிப்பு:</u>
1)மன்றம் அனுமதிக்கலாம்.
2)மேற்படி, வரப்பெற்ற இரண்டு விலைப்புள்ளிகளில் வ.எண்:1-ல் உள்ள திரு.டி.பாஸ்கரன், நகராட்சி ஒப்பந்ததாரர் அவர்களின் குறைவான விலைப்புள்ளியை ஏற்கலாம்.
3)பணியின் அவசர அவசியம் கருதி தனிஅலுவலரின் முன் அனுமதி பெற்று வேலை உத்திரவு வழங்கியதற்கும் மன்றம் அனுமதி அளிக்கலாம்.
(ந.க.எண்: /2018/இ1)

8. இந்நகராட்சி அலுவலக உபயோகத்தில் இயங்கிவரும் ஜீப் எண்:TN.73.D.2432-ன் காப்பீடு(INSURANCE) முடிவடைவதால் 12.06.2018 முதல் 11.06.2019 வரை புதுப்பிக்க வேண்டியுள்ளதால் மேற்குறிப்பிட்டுள்ள வாகனத்திற்கு காப்பீட்டு முனைமம்(INSURENCE PREMIUM) தொகை ரூ.16,704/- UNITED INDIA INSURANCE COMPANY LIMITED-க்கு செலுத்திட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு</u>:

1)மன்றம் அனுமதிக்கலாம்.

2)2018-19-ம் ஆண்டு வரவு-செலவு திட்டத்தில் சேர்த்து பொதுநிதியிலிருந்து செலவினத்தை மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்:1278/2018/இ1)

9. இந்நகராட்சி அலுவலக உபயோகத்தில் இயங்கிவரும் ஜீப் எண்:TN.73.E.7264-ன் காப்பீடு(INSURANCE) முடிவடைவதால் 12.06.2018 முதல் 11.06.2019 வரை புதுப்பிக்க வேண்டியுள்ளதால் மேற்குறிப்பிட்டுள்ள வாகனத்திற்கு காப்பீட்டு முனைமம்(INSURENCE PREMIUM) தொகை ரூ.17,532/- UNITED INDIA INSURANCE COMPANY LIMITED-க்கு செலுத்திட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு</u>:

1)மன்றம் அனுமதிக்கலாம்.

2)2018-19-ம் ஆண்டு வரவு-செலவு திட்டத்தில் சேர்த்து பொதுநிதியிலிருந்து செலவினத்தை மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்:1278/2018/இ1)

தனிஅலுவலர்(ம)ஆணையர்,
வாலாஜாபேட்டை நகராட்சி.